**செய்தி வெளியீடு எண் : 652** **நாள்: 22.04.2022**

## பத்திரிகையாளர் நல வாரியக் கூட்டம்

## மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு.மு.பெ. சாமிநாதன் அவர்கள் தலைமையில் இன்று (22.04.2022) நடைபெற்றது

மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ. சாமிநாதன் அவர்கள் தலைமையில் தலைமைச் செயலகத்தில் பத்திரிகையாளர் நல வாரியத்தின் முதல் கூட்டம் இன்று (22.04.2022) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பத்திரிகையாளர் நல வாரியம் அமைக்கப்பட்டு, அதன் முதல் கூட்டம் இன்று நடைபெறுகிறது. பத்திரிகையாளர் நல வாரியத்தின் மூலம் பல்வேறு ஆக்கப்பூர்வமான முடிவுகளை எடுக்கக் கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தி, எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்ற பத்திரிகையாளர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பல்வேறு திட்டங்களையும், பத்திரிகையாளர் நல வாரியத்தின் பல்வேறு உதவித் திட்டங்களை எல்லாம் அரசுடன் இணைந்து கடைக்கோடியில் இருக்கக் கூடிய களத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற பத்திரிகையாளர் மற்றும் அவர்களுடைய குடும்பத்தாருக்கும் எடுத்துச் சென்று கிடைக்கும் வகையில் செயல்பட வேண்டும்.

கடந்த காலங்களில் பத்திரிகையாளர்கள் மீது போடப்பட்ட வழக்குகள் தற்போது வாபஸ் பெறப்பட்டிருக்கின்றது. அதே போன்று, கொரோனா காலத்தில், பத்திரிகையாளர்களை முன்களப் பணியாளர்களாக அறிவித்து அவர்களுக்கு உதவித் தொகைகள், குடும்ப நல நிதிகள் உயர்த்தப்பட்டு எந்தவித தாமதமும் இன்றி வழங்கப்பட்டு வருகிறது. அதே நேரத்தில், பத்திரிகையாளர்களுக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்ட அட்டை வழங்கப்பட்டிருக்கிறது. பத்திரிகையாளர் நல வாரியத்தின் மூலமாக தெரிவிக்கப்படும் கருத்துக்கள், ஆலோசனைகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, விரைவாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்று முதல் நிதிநிலை அறிக்கை கடந்த ஆண்டு தாக்கல் செய்யப்பட்டு கடந்த செப்டம்பர் மாதம் மானியக் கோரிக்கை மீதான விவாதம் நடைபெற்றது. தற்போது 2022–2023 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, ஒவ்வொரு துறைக்கான மானியக் கோரிக்கை மீதான விவாதம் நடைபெற்று வருகிறது. செய்தி மற்றும் அச்சுத் துறையின் மானியக் கோரிக்கை 27.04.2022 அன்று நடைபெற உள்ளது. அதற்கு முன்பாக பத்திரிகையாளர் நல வாரிய உறுப்பினர்களாக பொறுப்பேற்றுக்

கொண்டிருக்கக் கூடிய தாங்கள் தெரிவிக்கும் ஆலோசனைகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நியாயமான பிரச்சனைகளுக்கு உடனுக்குடன் தீர்வு காண வேண்டும் என்று உறுதியேற்று செயலாற்றிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அதற்கு வலுச் சேர்க்கின்ற வகையில் பத்திரிகையாளர்களுக்கும், அரசுக்கும் ஒரு பாலமாக இருந்து இந்த வாரியம் செயல்பட வேண்டும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன் எனத் தெரிவித்தார்.

முன்னதாக, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசுச் செயலாளர் திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையுரை ஆற்றி பல்வேறு அறிவுரைகள் வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில் பத்திரிகையாளர் ஓய்வூதியம் கோரி வரப்பெற்ற விண்ணப்பங்களும், பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதி கோரி வரப்பெற்ற விண்ணப்பங்களும் பரிசீலிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டன. அரசாணையில் பத்திரிகையாளர் நல வாரிய உறுப்பினர்களுக்கு திருமண உதவித் தொகை ரூ.2,000/- என நிர்ணயிக்கப்பட்டுள்ளதை ரூ.3,000/- ஆக உயர்த்தி வழங்கிட ஒப்புதல் வழங்கப்பட்டது.

இக்கூட்டத்தில் பத்திரிகையாளர் நல வாரியத்தின் அலுவல்சாரா உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ள தினத்தந்தி குழுமத்தின் இயக்குநர் திரு. சிவந்தி ஆதித்யன் பாலசுப்பிரமணியன், தினகரன் நாளிதழின் நிர்வாக இயக்குநர் மற்றும் ஆசிரியர் திரு.ஆர்.எம்.ஆர். ரமேஷ், தி இந்து நாளிதழின் துணை ஆசிரியர் திரு.பி. கோலப்பன், தி வீக் வார இதழின் முதன்மை சிறப்புச் செய்தியாளர் திருமதி. லெட்சுமி சுப்பிரமணியன், தீக்கதிர் நாளிதழின் செய்தியாளர் திரு. எஸ். கவாஸ்கர், புதிய தலைமுறை தொலைக்காட்சியின் சிறப்புச் செய்தியாளர் திரு.எம். ரமேஷ் மற்றும் அலுவல்சார் உறுப்பினர்கள், அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

முன்னதாக, செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் முனைவர் வீ.ப. ஜெயசீலன், இ.ஆ.ப., அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். இறுதியாக, கூடுதல் இயக்குநர் (மக்கள் தொடர்பு) திரு.ச. பாண்டியன் அவர்கள் நன்றி கூறினார்.

*********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**